**தலைப்பு 122 – பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 122 – பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 நவம்பர் 15 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,526.30 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,378.79 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 2,147.51 மில்லியன் அதாவது 60.90 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 1,114.80 | 1,055.12 | 59.68 | 5.35 |
| மூலதன | 2,411,50 | 323.67 | 2,087.83 | 86.58 |
| மொத்தம் | 3,526.30 | 1,378.79 | 2,147.51 | 60.90 |

2.2 **முற்பணக் கணக்குகள்**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 12201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 15.00 | 14.76 | 5.00 | 15.57 | 45.00 | 20.58 |

2.3 **கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 80.08 மில்லியன் ஆகும்.

2.4 **பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 106.09 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0166/000 | 0.005 |
| 6000/0000/00/0013/0121/000 | 105.604 |
| 6000/0000/00/0016/0111/000 | 0.421 |
| 6000/0000/00/0020/0018/000 | 0.061 |
| மொத்தம் | 106.091 |

2.5 **கணக்காய்வு அவதானிப்பு**

பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த

முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (i) | ஆளணி சம்பளப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | மேலதிக எரிபொருள் பதிவேடு | 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | சில்லறைக் காசேடு | நிதிப்பிரமாணம் 446 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | அடியிதழ் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச்சுற்றறிக்கை | நாளது வைரயாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | பொருட் பதிவேட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 454(1) | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்வு சான்றுகளின்மை

முன்னால் அமைச்சரினாலும் அமைச்சின் முன்னாள் செயலாளர்கள் இரண்டு பேர்களினாலும் பெறப்பட்டிருந்த ரூபா 433,575 கூட்டுப்பெறுமதியான 05 கையடக்க தொலைபேசிகளும், அமைச்சின் முன்னாள் செயலாளரினால் பெறப்பட்டிருந்த ரூபா 8,000 பெறுமதியான 03 car charges மீண்டும் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சரின் உத்தியோகபூர்வ

இல்லத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,355,520 பெறுமதியான தளபாட உபகரணங்களும் ஒலிக் கட்டுப்படுத்தல் முறைமை பொருத்தப்பட்டமைக்கான அல்லது அவற்றை பெற்றுக்கொண்டமைக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் உறுதிப்படுத்திய உறுதிபடுத்தல் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 25,133,352 ஆகும்.

### 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 951,950,000 நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. அரச ஊடக விருது விழா ஒன்றை நடாத்துவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,000,000 நிதியேற்பாட்டிற்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்காது அந்த நிதியேற்பாட்டில் ரூபா 9,400,000 ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) 42 செலவின விடயங்களுக்கான மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 26 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.5 கட்டுநிதிக் கணக்குகள்

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 10 பதவிநிலையற்ற உத்தியோகத்தர்களுக்கு 90 சந்தர்ப்பங்களில் ரூபா 796,395 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

### 3.6 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தத்திற்காக எதிர்வரும் வருடங்களின் போது செலவிடும் எதிர்பார்ப்பில் 2010 ஆம் ஆண்டின் போது செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு அது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த வைப்பு மீதி ரூபா 1,266,697 ஆக இருந்த போதிலும், அதனைத் தீர்த்து வைப்பதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஒக்தோபர் 23 ஆந் திகதிய பீடீ/356/280/3/எஸ் ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வியாபார அறிவித்தல்களுக்காக அறவிடப்படுகின்ற வரி வருமானம், நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்று தாபிக்கப்படும் வரை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2009 நவம்பர் 04 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அந்த வரி வருமானம் வைப்புக் கணக்கில்

செலவு வைக்கப்பட்டு றன்மிஹிதென்ன டெலிசினிமா பூங்காவை நிர்மாணிப்பதற்கும் அதற்கு இணையான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்காகவும் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வைப்புக் கணக்கில் ரூபா 102,141,007 தொகையான மீதியும், திறைசேரி உண்டியல்களில் ரூபா 378,400,000 தொகையும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் மேற்கூறப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

12201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 544,899 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகளில் ரூபா 59,380 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1:1:6 ஆம் பந்தியின் பிரகாரம் பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி 03 மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணியிடமாற்றம் பெற்றுச்சென்று 3 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது கொண்டுவரப்படுகின்ற 04 உத்தியோகத்தர்களின் ரூபா 463,196 கூட்டுத்தொகையான கடன் மீதி 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.8.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது அமைச்சினை உள்ளடக்கி அதன் கீழ் காணப்படுகின்ற 13 நிறுவனங்களுக்காக நடாத்தப்பட வேண்டிய 52 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்காக 18 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

#### 3.8.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

அமைச்சின் 04 வாகனங்கள் இரண்டு வருடகாலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சினால் அந்த அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பெறவேண்டிய மீதி**

2006 மார்ச் 31 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் இரண்டாவது பகுதியின் மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட 2006 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு இணங்க தொலைக்கட்சி அலைவரிசை 02 தொடர்பாக இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படம், தொலைக்காட்சி நாடகம் மற்றும் வியாபார நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கடந்த 06 வருடங்களுக்காக 2015 திசெம்பர் 31 வரையில் அறவிடவேண்டிய ரூபா 32,099,978 தொகையான வரி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.10 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(1)(அ) | 3,347,577 | மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ஏற்பட்ட 10 வாகன |

விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | - | றன் மிஹிதென்ன டெலிசினிமா பூங்காவில் நாளாந்த கடமைத் தேவைகளுக்காக வழங்கப்பட்ட 2 வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை

----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சருக்கு உரித்தான 03 வாகனங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் 06 வாகனங்களும், பிரதி அமைச்சரினால் சுற்றறிக்கையின் பிரகாரம் உரித்தான 03 வாகனங்களுக்கு மேலதிகமாக, தகவல் திணைக்களத்திலிருந்து வாகனமொன்றும் பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | 2015 யூன் 17 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | ஊடகத்துறை அமைச்சரினால் 04 வாகனங்களும், பிரதி அமைச்சரால் (2015 யூன் மாதத்திற்கு முன்பிலிருந்து) 02 வாகனங்களும் 2015 பொதுத் தேர்தலின் போது தனது காட்சியின் அல்லது வேட்பாளரை பிரசித்தப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட வாகனத்திற்கு மாதமொன்றிற்கு ரூபா 100,000 தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும் அப்பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) 2015 யூன் 17 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/92 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (1) ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 இலக்க சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி | - | அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பிரத்தியோக பதவியணியினர்களுக்காக வழங்கப்பட்ட 05 வாகனங்கள் உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி அமைச்சிற்கு கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் அமைச்சினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.11 வெளிநாட்டுதவி/ உள்நாட்டுக் கடன் செயற்திட்டம்**

**செயற்திட்டங்களின் செயலாற்றல்**

இலங்கை அரசாங்கத்தினதும் ஜப்பான் அரசாங்கத்தினதும் நிதி உதவியின் கீழ் (JICA Loan) 2014 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட பௌமிக்க தொலைக்காட்சி ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்காக எண்ணியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டுக் கடன் ரூபா 950 மில்லியன் தொகையும், வெளிநாட்டு நிதியீட்டத்துடன் தொடர்புடைய உள்நாட்டுக் கிரயம் ரூபா 950 மில்லியனுமாக ரூபா 1900 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் உள்நாட்டுக் கிரயத்தின் கீழ் ரூபா 2.7 மில்லியன் செயற்திட்டத்திற்காக முறையற்ற வகையில் நியமிக்கப்பட்ட பதவியணியினர்களுக்குச் சம்பளம் செலுத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தது. அந்த பதவியணி நியமித்தலும் முறையற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.12 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

அமைச்சு பிரதான பணிகளை போதிளவில் நிறைவேற்றாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் திரைப்படங்களுக்காக எண்ணியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) றன்மிஹிதென்ன தேசிய டெலிசினிமா பூங்கா மன்ற அதிகாரச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) காலாண்டு ரீதியாக 36 செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 11 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**(ஆ) அறை வசதிகளை வழங்குதல்**

றன்மிஹிதென்ன டெலிசினிமா திரைப்பட கிராமத்தில் படப்பிடிப்பிற்காகச் சமூகமளிப்பவர்களுக்கு அறை வசதிகளை வழங்குவதற்கு ஏ, பீ மற்றும் சீ தரங்களில் 03 வகையான அறைகளின் கீழ் 43 அறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், ஆண்டின் போது அவற்றில் முறையே 06 சதவீதம், 07 சதவீதம் மற்றும் 15 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட பின்வரும் விடயங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) செலசினே நிறுவனத்தை அரசாங்க கம்பனியொன்றாக தாபித்தல்

(ii) தேசிய ஔிபரப்பு அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபித்தல்

(iii) பொருளாதார, சமூக மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்குரிய முக்கியமான தகவல்களை பத்திரிகையிலிருந்து சேகரித்தல்

(iv) ஊடகத்துறை மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான அமைச்சு மற்றும் அது தொடர்பான நிறுவனங்கள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

**3.13 வங்கிக் கணக்கு செயற்படுத்தலிலான குறைபாடு**

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

பாராளுமன்ற மறுசீரமைப்புப் பிரிவினால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சீராக்கங்கள் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புக்கள் | 200,788 | - | 200,788 |
| (ii) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 419,836 | 433,942 | 853,778 |
| (iii) | இனங்காணப்படாத வரவு | 5,000,000 | - | 5,000,000 |
| (iv) | இனங்காணப்படாத செலவு | 3,180,422 | - | 3,180,422 |

## 3.14 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) இரத்தினபுரி மாவட்டத்தின் பிரதேச ஊடகவியலாளர்களுக்கு வழங்குவதற்கு 80 CDMA தொலைபேசிகளைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு ரூபா 102,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அச் செயற்பாடுகள் அரசியல் அமைப்புக்களின் மூலம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் தொலைபேசிகளை வழங்குவதற்கு நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட முறை மற்றும் உரிய அங்கீகாரம் போன்ற தகவல்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் 2015 மே 05 ஆந் திகதி முதல் றன்மிஹிதென்ன டெலிசினமா பூங்காவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவர் சேவைக்கு அறிக்கையிட்டமையை உறுதிப்படுத்தாமல் அந்தத் திகதி முதல் 2015 திசெம்பர் மாதம் வரை சம்பளம் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 339,874 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அமைச்சரின் பதவிக் காலத்திற்கு மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் உதவிச் செயலாளர் (தொழிலாளர் தொடர்பு இலங்கை நிருவாக சேவையிலில்லாத) பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு அமைச்சரின் பதவி இல்லாமல் இருந்த 2015 ஆகஸ்ட் 17 ஆந் திகதி முதல் 2015 நவம்பர் 02 ஆந் திகதி வரையான காலத்திற்குரிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 117,241 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உத்தியோகத்தர் அக்காலப்பகுதியில் சேவைக்கு அறிக்கையிட்டமையை உறுதிப்படுத்துவற்கு போதியளவான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அந்த உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்ட சம்ளம் மற்றும் படிகள் அறவிட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 33,110 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2015 சனவரி மாதம் வரை ஊடகத்துறை அமைச்சுச் செயலாளரினதும் அதன் பின்னர் நியமிக்கப்பட்ட செயலாளரினதும் பிரத்தியோக செயலாளரினால் கொழும்பிற்கு வெளியே கடமைகளில் ஈடுபட்டதற்காக 21 சந்தர்ப்பங்களில் ரூபா 199,320 தொகை பெறப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்ட கடமைகள் தொடர்பான விபரங்கள் அல்லது நிறைவேற்றப்பட்ட கடமைகளை உறுதிப்படுத்துவற்குரிய சான்றுகள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.15 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஊடகவியலாளர்களுக்கு சுங்கவரியின்றி மோட்டார் சைக்கிள்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக செய்திப்பத்திரிகை அறிவித்தலைப் பிரசுரித்தல் மற்றும் நேர்முகப் பரீட்சைச் செலவினமாக மீளாய்வாண்டின் போது ரூபா 844,933 தொகை செலவிடப்பட்டிருந்த போதும், 2016 மே 13 ஆந் திகதி வரையிலும் மோட்டார் சைக்கிள் வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை.

## 3.16 நட்டமும் இழப்பும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சின் வரிப் பிரிவின் மூலம் தீர்மானிக்கப்பட்ட வரித்தொகை செலுத்தாமல் இறக்குமதி செய்யப்பட்ட வியாபார அறிவித்தல் விளம்பரம் செய்யப்படுகின்றதா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தெரிவுப் பரிசோதனைகளின் போது முறையே ரூபா 2,500,000 மற்றும் ரூபா 3,000,000 வரித் தொகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அந்தப் பரிசோதனையின் போது இறக்குமதி செய்யப்பட்ட அந்தப் பரிசோதனையில் இறக்குமதி செய்யப்பட்ட 20 வியாபார அறிவித்தல்களில் மாத்திரம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 10,000,000 ஆக இருந்தது. வரிப் பிரிவினால் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமையினால் வருடாந்தம் அரசாங்கத்திற்கு பாரியளவிலான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது றன்மிஹிதென்ன டெலிசினிமா பூங்காவின் நுழைவுச்சீட்டு விற்பனை, படமெடுத்தல், அறை வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய வருமானங்களின் கூட்டுமொத்தம் ரூபா 12,075,277 ஆக இருந்ததுடன் அதன் பராமரிப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்குரிய செலவினம் ரூபா 20,299,830 ஆனமையால் ஆண்டின் நட்டம் ரூபா 7,594,553 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது றன்மிஹிதென்ன டெலிசினிமா பூங்காவின் உள்ளக வீதி முறைமையொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் முதல் கட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 33,969,725 தொகையான இறுதிப் பட்டியலின் பிரகாரம் ரூபா 9,994,476 மேலதிக தொகையொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய தொகை ரூபா 23,975,249 ஆக இருந்த போதிலும், முற்பணமாக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 25,000,000 செலுத்தப்பட்டமையால் ரூபா 1,024,751 தொகையொன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

## 3.17 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக அமைச்சினால் சீராக்கப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2012 | 8(ஆ)(ii) | மஹிந்த ராஜபக்ஷ டெலிசினிமா நாடக பூங்காவிற்காக தனியான அதிகாரச்சட்டமொன்றை பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு 2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தச் சட்டம் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 2012 | 12(அ) | றன்மிஹிதென்ன டெலிசினிமா பூங்காவிற்காக விநியோகிக்கப்பட்ட நுழைவுச்சீட்டிற்கும் பெறப்பட்ட வருமானத்திற்குமிடையே காணப்பட்ட ரூபா 99,305 பற்றாக்குறை தொடர்பாக 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2012 | 1.12(ஏ) | 2012 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஊடகத்துறை பண்பாட்டு விழுமியக் கோவை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 2012 | 1.13(இ) | வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது, நிரந்தர அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக தற்காலிக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. நிரந்தர அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான முறைமையொன்று 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2013 | 5.11(ஆ) | 2016 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தும் வகையில் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை உள்நாட்டில் ஒளிபரப்புவதற்காக வரியொன்று விதிக்கப்பட்டிருந்தது. 15 அனுமதிப்பத்திரங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கேபள், செய்மதி, இணையதளம் மற்றும் தொலைபேசி அடிப்படையிலான தொலைக்காட்சி அலைவரிசைகளிலிருந்து ஒளிப்பரப்பப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த வரி விதிப்பின் கீழ் இல்லாதிருந்தமையால் உரிய வரி விதிக்கும் நோக்கம் இந்நாட்டில் நிறைவேற்றப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| 2014 | 3.16(அ) | கேபள் தொலைக்காட்சிக்கான அனுமதிப்பத்திரத்தை 2012 ஆம் ஆண்டின் போது பெற்ற நிறுவனமொன்று சட்டவிரோத முறையில் செயற்பட்டிருந்தமை 2013 ஆம் ஆண்டின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சினால் அந்த நிறுவனம் தொடர்பாக எந்தப் பரிசோதனையோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. பாராளுமன்றத்தின் செயற்குழுக் கட்டளையின் பிரகாரம் கேபள், செய்மதி மற்றும் இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட தொலைக்காட்சி நிறுவனங்கள் தொடர்பாக புதிய கொள்கையொன்று ஏற்படுத்தப்படாது 2014 நவம்பர் மாதத்தின் போது செய்மதி தொழில்நுட்பத்தைப் போன்று தொலைக்காட்சி வலையமைப்பை நடாத்துவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |

**3.18 அரசாங்க கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் அமுல்படுத்தப்படாமை**

அமைச்சு தொடர்பாக அரசாங்க கணக்குகள் குழுவினால் 2014 சனவரி 22 ஆந் திகதி வழங்கப்பட்ட கட்டளைகளுக்கிடையே 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படாத கட்டளைகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அரசாங்க கணக்குகள் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பந்தியின் தொடர்பு | தொடர்புடைய விடயம் |
|---|---|
| 05 | இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்காகவும் முறைப்பாடு செய்யக்கூடிய வகையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்தல். |
| 07 மற்றும் 08 | ஒளிபரப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டதை அங்கீகரிக்கச் செய்தலும் தாபித்தலும், எண்ணியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் செயல்முன்னேற்றம் தொடர்பாக குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தல். |
| 12 | அரசாங்க நிதி முறையற்ற வகையில் தனியார் தரப்பினருக்குச் செல்வதைத் தடுப்பதற்காக தனியார் வானொலி அலைவரிசையினதும் தொலைக்காட்சி அலைவரிசையினதும் அனுமதிப்பத்திரதாரர்களின் |

| | |
|---|---|
| | செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், வருடாந்த கட்டணம் அறவிடல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல் என்பவைகளுக்காக குறித்த திட்டமொன்றை ஏற்படுத்துதல். |
| 13 | அனுமதிப்பத்திரதாரர்களின் சரியான தகவல்களை கம்பனிப் பதிவாளரிடமிருந்து பெற்று குழுவிற்கு அறிக்கையிடல் மற்றும் கேபள், செய்மதி மற்றும் இணையதள அடிப்படையிலான தொலைக்காட்சி நிறுவனம் தொடர்பான புதிய கொள்கையொன்றை ஏற்படுத்துதல். |
| 15 | 2009, 2010 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் |
| 20 | 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபன மொன்றைச் சமர்ப்பித்தல். |
| 26 | தேசிய ஊடக கொள்கையொன்றை ஏற்படுத்துதல் மற்றும் தொலைக்காட்சி அறிவித்தல்களை நிர்வகித்தலின் தேவை கவனத்தில் கொள்ளப்படுவதுடன் அதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். |

## 3.19 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சினால் 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 648,312 தொகை செலவில் இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக “FRONTIER” பெயரில் 1,000 சஞ்சிகைப் பிரதிகள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அவை பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. 2016 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த நாளிதழ்கள் பகிர்ந்தளிக்கப்படாது அழிவடைந்த பொருட்கள் களஞ்சியத்தில் குவித்து உக்கும் நிலையில் காணப்பட்டன.

(ஆ) 2015 யூலை 20 ஆந் திகதி முதல் றன்மிஹிதென்ன டெலிசினிமா நாடக பூங்காவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் கையளிக்கப்பட்ட கம்பனிக்கு அத்திகதி முதல் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 1,162,023 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய கம்பனி உடன்படிக்கை வரைவின்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) றன்மிஹிதென்ன டெலிசினிமா நாடக பூங்காவின் முகாமையாளர் (அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகள்) பதவியின் பதிற்கடமைக்குக் தேவையான ஆகக் குறைந்த கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்யாதிருந்த உத்தியோகத்தரொருவர் 2014 ஏப்ரல் 03 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த உத்தியோகத்தர் காணப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கு முரணாக ரூபா 100,000 படியொன்றும், 10 சந்தர்ப்பங்களுக்காக 1/20 படியாக ரூபா 29,425 உபசரிப்புச் செலவின முற்பணமாகப் பெறப்பட்ட தொகையில் உணவு பானங்களுக்காக 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா

130,574 தொகையும் எரிபொருள் செலவினங்களுக்காக ரூபா 121,108 தொகையுமாக ரூபா 381,107 கூட்டுமொத்தமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (ஊடக) பதவியில் நிரந்தரமாக்கப்படாத உத்தியோகத்தர் ஒருவருக்கு 2013 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் நியதிகளுக்கு முரணாக பதவிநிலைத்தர பதவியொன்றில் 6 வருட காலம் கட்டாய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தரொருவருக்கு சலுகை விலையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமொன்று 2015 செப்தெம்பர் 03 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாதிருந்தும் இந்த உத்தியோகத்தருக்கு சலுகைவிலை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதலின் மூலம் அரசாங்கத்திற்கு வரி வருமானமாக கிடைக்க வேண்டிய ரூபா 2,271,732 தொகையான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(உ) 2006 யூன் 29 ஆந் திகதிய வர்த்தமானியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் 04 ஆம் கட்டளையின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வணிக நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்புவதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபையின் வளவாளர்கள் திரைப்படங்கள், தொலைக்காட்சி, சாகித்திய, மொழி, விஞ்ஞானம், வரலாறு, மனோதத்துவ மற்றும் சட்டம் போன்ற துறைகள் தொடர்பான திறன்களையுடையதாக இருக்க வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் மெய்மையாய்வுச் சபையில் உள்ள அங்கத்தவர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட துறைகள் வெளிப்படுத்தப்படாதிருந்தமையும், ஊடகவியலாளர்கள் இலக்கியவாதிகளுக்கும் மற்றும் திரைப்பட ஒளிப்பதிவுத் துறைகளுக்கும் உரிய உத்தியோகத்தர்கள் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.20 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 18 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 111 | 105 | 06 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 50 | 43 | 07 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 30 | 40 | - | 10 |
| (vi) | ஊடகத்துறை - பாராளுமன்ற அலுவல்கள் | 1,015 | 1,015 | - | - |
| | மொத்தம் | 1,233 | 1,222 | 21 | 10 |